### மெட்ரோ ரயில் நிலையங்களில்

# இன்று முதல் ஸ்மார்ட் கார்டு மூலம் பார்க்கிங் கட்டணம் செலுத்தலாம்

சென்னை, ஜூலை 4-

மெட்ரோ ரயில் நிலையங்களில் ஸ்மார்ட் கார்டு மூலம் பார்க்கிங் கட்டணம் செலுத்தும் நடைமுறை இன்று மாலை முதல் நடைமுறைக்கு வர உள்ளது.

சென்னையில் மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகளின் வசதிக்காக நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி, மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு வருபவர்கள் கார் மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மெட்ரோ ரயில் நிலையங்களில் தினமும் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் நிறுத்தப்படுகிறது. வாகனங்களை நிறுத்துவதற்கு குறிப்பிட்ட கட்டணங்களை பணமாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் வசூலித்து வருகிறது. இதன் மூலம் ரூ.40 லட்சம் வரையில் வருவாய் கிடைத்து வருகிறது.

இந்த நிலையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணத்தை ஸ்மார்ட் கார்டு மூலம் செலுத்தும் புதிய வசதியை மெட்ரோ நிர்வாகம் தொடங்க திட்டமிட்டது. அதன்படி கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் இன்று மாலை முதல் வாகன பார்க்கிங் கட்டணத்தை 'ஸ்மார்ட் கார்டு' மூலம் செலுத்தும் வசதி தொடங்கப்படுகிறது. இதற்கான நிகழ்ச்சியை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பார்க்கிங் கட்டணம் செலுத்தும் வசதியை தொடங்கி வைக்கிறார். இத்தொடர்ந்து மற்ற மெட்ரோ ரயில் நிலையங்களிலும் 'ஸ்மார்ட் கார்டு' மூலம் கட்டணம் செலுத்தும் வசதி விரைவில் நடைமுறைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.